# தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரிகளை (2020-2022) இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்த்தல்
# பாடசாலைகளில் நிலைப்படுத்துவதற்கான விண்ணப்பப் படிவம்

**தேசிய கல்வியியல் கல்லூரிகளில்** *2020/2022* **வருடங்களில் பாடநெறிகளைத் தொடர்ந்த பயிலுனர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான தகவல்கள் நிகழ்நிலை மூலமாக சேகரிக்கப்படவுள்ளது**.

**அதற்கமைய** ***teacher.moe.gov.lk*** எனும் இணைப்பில் தரப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய 2025.03.20 ம் திகதி முதல் 2025.03.28. ம் திகதி வரையில் அப் பயிலுனர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

## கருத்தில் கொள்க.

- ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு தடவை மாத்திரமே நிகழ்நிலை மூலம் தரவு முறைமையினுள் பிரவேசிப்பதற்கு சந்தர்ப்பமளிக்கப்படும். ஆகையால் தரவு முறைமையினுள் பிரவேசிக்க முன்னர் ஆலோசனைகளை நன்கு வாசித்து தரவுகளை உள்ளீடு செய்யவும்.

- நிலைப்படுத்தல் தொடர்பில் தகவல்களை வழங்கும் வரையில் தரவு முறைமையினுள் பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்படும் USER NAME மற்றும் PASSWORD ஆகியவற்றை தங்கள் வசம் வைத்திருப்பது அத்தியாவசியமாகும்.

- நிலைப்படுத்தும் போது தாங்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மாகாணத்திற்கு முன்னுரிமை வழங்கி தேசிய கல்வி நிறுவகத்தின் பெறுபேறுகள் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தங்களது பாடத்திற்குரிய திறமை வரிசையைக் கருத்தில் கொண்டு மாத்திரம் நிலைப்படுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- அத்தியாவசிய வெற்றிடங்களுக்கு தாங்கள் விருப்புத் தெரிவிக்காதிருந்தாலும், திறமை வரிசை ஆவணத்தில் ஆகக் குறைந்த திறமையை பெற்றுள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து சேவையின் தேவை கருதி குறித்த அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், தாங்கள் உரித்தாகும் மாகாணத்தினுள் போதியளவு எண்ணிக்கையில் வெற்றிடங்கள் இல்லாத பட்சத்தில், வெற்றிடங்கள் நிலவும் வேறு மாகாணங்களில் தாங்கள் நிலைப்படுத்தப்படலாம்.

- **மேலும் எம்மால் உறுதிப்படுத்தப்பட்ட வெற்றிடங்களுக்கு மாத்திரம் நிலைப்படுத்தல் செய்யப்படும் என்பதுடன், அதிபர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வெற்றிடங்கள் தொடர்பான கடிதங்கள் எவையும் ஒருபோதும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.**

- **விசேடமாக தாங்கள் ஆட்சேர்க்கப்பட்ட மாகாணத்திற்கு முன்னுரிமை வழங்கி தேசிய கல்வி நிறுவகத்தின் பெறுபேறுகள் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தங்களது பாடத்திற்குரிய திறமை வரிசையின் படி மாத்திரம் நிலைப்படுத்தல் செய்யப்படும் என்பதால், தாங்கள் எதிர்பார்க்கும் சேவை நிலையத்திற்கே நியமனம் வழங்கப்படும் என வாக்குறுதியளித்து பணம் பெற்றுக் கொள்ள முயற்சிக்கும் மோசடி நபர்களிடம் சிக்கிக் கொள்வதிலிருந்து தவிர்ந்துகொள்ளுமாறும் தெரிவித்துக் கொள்கின்றேன்.**